# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண் : 0533 / 2016 /பேரு

ஆணை எண் : 073 / 2017

நாள் : 21/04/2017

திரு.சி.அருள்,
த/பெ. சின்னக்காள்,
10 வது வார்டு முன்னாள் உறுப்பினர், - முறையீட்டு மனுதாரர்
மேலப்புள்ளு விளை, பறக்கை (அஞ்சல்)
கன்னியாகுமரி மாவட்டம் – 629 601.

செயல் அலுவலர்,
தெங்கம்புதூர் பேரூராட்சி, - எதிர் மனுதாரர்
தெங்கம்புதூர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

கன்னியாகுமரி மாவட்டம், தெங்கம்புதூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு.சி.அருள் அவர்களின் 19.08.2014 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0533/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது :-

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 19.08.2014 மற்றும் 23.6.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில், பேரூராட்சியின் அனுமதியில்லாமல் சுமார் 4000 சதுர அடியில் வீடு கட்டியுள்ளதாகவும், அவ்வீடு கட்டுமான வேலைக்கு பேரூராட்சி குடிநீர் இணைப்பிலிருந்து குடிநீர் பயன்படுத்தப்படுவது பேரூராட்சி மன்றக் கூட்டத்திற்கு அஜந்தா சார்பு செய்யப்படாதது, மன்ற தீர்மானம் எண் 248-ஐ திருத்தம் செய்தது 6 மாதம் கடந்த பின்னரும் மன்றக் கூட்டம் நடத்தப்படாதது, கூட்ட நிகழ்வுகள் எழுதப்படாதது, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஏற்றெடுத்த இடத்திற்கான பத்திர நகல் பதிவு செய்யப்படாதது, மன்றத்தலைவர் பினாமியாக ராகவன் என்கிற ஒப்பந்ததாரர் செயல்படுவது, பேரூராட்சி அனுமதியில்லாமல் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் கல் தொழிற்சாலை வைத்துள்ளது, பேரூராட்சி பகுதிகளில் புல் வெட்டியதாக செயற்பொறியாளர் அனுமதியில்லாமல் தலைவரின் பினாமியான ராகவன் ஒப்பந்ததாரர் மூலம் பேரூராட்சி நிதியை எடுத்துள்ளது, ஆகிய புகார்களை மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணை எண்.0533/TPT/2016, நாள் 28.06.2016 வாயிலாக மேற்படி முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.07.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறையீட்டு மனு சம்பந்தமான முழுமையான விளக்கம் தெரிவிக்கவில்லை என்பதால் முறையீட்டு மனு மீது குறிப்பான விளக்கத்தினை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்திட ஆணையிடப்பட்டது. அதன்படி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ந.க.எண் 151/2016/A1/ நாள் 20.07.2016 மற்றும் 21.12.2016ல் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :-

தெங்கம்புதூர் பேரூராட்சி முன்னாள் பேரூராட்சி தலைவர் பெயரில் வரைபட அனுமதி ஏதும் வழங்கவில்லை எனவும் மனைவி பெயரில் அனுமதி வழங்கப்பட்ட வீட்டின் கட்டுமான வேலைக்கு தெங்கம்புதூர் பேரூராட்சி குடிநீர் உபயோகிக்கப்படவில்லை எனவும் மேலும் தனியாது வீடு அருகாமையில் பொது நல்லி இணைப்புகளோ குடிநீர் திட்ட தொட்டிகளோ இல்லை எனவும் மேலும் வரைபட அனுமதி பெற்ற சர்வே எண். அதன் அருகில் தனியாது பெயரிலோ அல்லது குடும்பத்தார் பெயரிலோ எவ்வித இணைப்பும் வழங்கவில்லை என்றும் பேரூராட்சியில் 06.06.2013-ஆம் ஆண்டு அவசர கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டதற்கான அஜந்தா சார்பு செய்யப்பட்டுள்ளது என்றும் தீர்மான புத்தகத்தில் தீர்மான எண்.248 திருத்தப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக தீர்மான புத்தக நகலினை இணைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் கீழ்க்கண்டவாறு பேரூராட்சி மன்ற கூட்டம் மொத்தம் 34 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | கூட்டத்தின் தன்மை | எண்ணம் |
|---|---|---|
| 1 | சாதாரணக்கூட்டம் | 19 |
| 2 | சிறப்புக்கூட்டம் | 2 |
| 3 | அவசரக்கூட்டம் | 13 |

மேலும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஏற்றெடுத்த இடத்திற்கான ஆதாரமாக பத்திர நகலினையும் தெங்கம்புதூர் பேரூராட்சி தீர்மான புத்தகங்களில் எழுதப்படாத கூட்ட நிகழ்வுகள் ஏதும் இல்லை என்றும் பேரூராட்சியில் சாதாரண கூட்டம் நடைபெற்ற நாள் விபரம் தொடர்பான விபரங்கள் வெளிப்படையாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் கல் தொழிற்சாலை வைத்துள்ளதாக குறித்த புகார் தொடர்பாக ஆய்வு செய்ததில் கல் தொழிற்சாலை எதுவும் இல்லை என்றும் மேலும் பேரூராட்சி மன்றத்தில் உரிய அதிகாரிகள் மேலொப்பம் பெற்று வரவு செலவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனு சம்பந்தமாக முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 533/TPT/2016 நாள் 30.12.2016 வாயிலாக 13.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராக மனுதாரர் அழைக்கப்பட்டார். மனுதாரர் முறையீட்டு மனு சம்பந்தமாக முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்காக 13.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனினும் மீண்டும் ஒரு வாய்ப்பளிக்கும் வகையில் விசாரணைக்காக 30.03.2017 அன்று ஆஜராகிட மீண்டும் அழைக்கப்பட்டும் மனதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இதனிடையே செயல் அலுவலர் 14.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராக அழைக்கப்பட்டார். இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்பொழுது செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்.

"முறையீட்டு மனு குறித்து A1/151/2016 நாள்:21.12.2016 அன்று ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் அதையே என்னுடைய வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளு-மாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

"முன்னாள் தலைவர் கற்றுச்சுவர் மற்றும் வீடு கட்ட பேரூராட்சியில் எந்த அனுமதியும் வழங்கவில்லை. பேரூராட்சியிலிருந்து அவர், தான் வீடு கட்டுவதற்கு குடிநீர் இணைப்பு தொட்டியில் இருந்து எந்த தண்ணீரும் பெறவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன். மன்ற கூட்ட நடவடிக்கைகள் அஜந்தா குறித்த நேரத்தில் அனுப்பப்படுகின்றது. அதற்கு ஆதாரங்கள் உள்ளது. கூட்டத்தில் எல்லாம் அவர் ஒழுங்காக கலந்து கொள்வார். மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டுவதற்கு அசல் பத்திரம் உள்ளது. பேரூராட்சி கூட்டம் நடந்த அன்றே தலைவர் கையொப்பம் இடுவார். எனக்கு முன்னர் இருந்த செயல் அலுவலர் முறையாக செய்தார். நானும் முறையாகவே செய்தேன். கட்சிரீதியாக அவர்கள் இருவரும் வெவ்வேறு கட்சியில் இருந்ததால் வெவ்வேறாக செயல்படுவார்கள். மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டுவதற்கு வைரவிளை ஊரை சார்ந்த பொது மக்கள் நன்கொடை எழுதிகொடுத்து அது வாங்குவதற்கு எல்லாம் குடிசார்பு 2014 ஆம் ஆண்டு ஆவண எண்.1695 ஆக பதிவு செய்யப்பட்டது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று வாக்குமூலம் அளித்தார்.

மேற்கூறிய நிலையில், முறையீட்டு மனு செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள், செயல் அலுவலரின் வாக்குமூலங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன, முறையீடு குறித்த விளக்கம் அளிக்கவும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை குறித்தும் விசாரணைக்காக மனுதாரருக்கு இரு வாய்ப்புகள் அளித்தும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரர் நேரில் ஆஜராகாத நிலையில் செயல் அலுவலர் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையீட்டு மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகின்றது.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. சி. அருண்,
த/பெ. திரு. சின்னக்கான்,
10 வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
மேலப்புள்ளு விளை, பரக்கை (அஞ்சல்)
கன்னியாகுமரி மாவட்டம் - 629 601.

செயல் அலுவலர்,
தெங்கம்புதூர் பேரூராட்சி,
தெங்கம்புதூர்,
கன்னியாகுமரி மாவட்டம்.